வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 14.05.2025 புதன்கிழமை | இதழ் : 135 | பக்கங்கள் : 12

# ஆட்சியமைக்க தடை போட்டால் அதற்குப் பதிலடி கொடுப்போம்!

## எதிரணிகளுக்கு ரில்வின் சில்வா எச்சரிக்கை

கொழும்பு, மே 14

**தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு தடை ஏற்படுத்தினால் அதற்கான பதிலடி கொடுக்கப்படும் என ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அமைக்க எதிர்க்கட்சிகள் தடையை ஏற்படுத்தினால், அதேபோன்று எதிர்க்கட்சிகளுக்கும் எதிர்த் தாக்கங்கள் ஏற்படலாம் எனவும் அவர் கூறினார்.

மக்களின் விருப்பத்துக்கு இணங்க அதிகாரம் அமைய வேண்டும் என்றும் அதில் இடையூறு ஏற்படுத்தக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மிகப்பெரும்

11



# மின் கட்டணம் குறித்து பொய் உரைத்தது அரசு!

## சாடுகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, மே 14

மின்சாரக் கட்டணங்கள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி பொய்யுரைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் ஊழல் மோசடிகள் மற்றும வீண் விரயத்தை குறைப்பதன் மூலம் 30 வீதமளவில் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும் என தேசிய மக்கள் சக்தி மக்களிடம் உறுதிமொழி வழங்கியது. எனினும் இந்த உறுதிமொழி பொய்யானது என அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபையின் செலவை விடவும் கட்டணத் தொகை குறைவாகக் காணப்படுவதனால் நட்டம் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

மின்சார உற்பத்திக்கான செலவுகளை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதனை போட்டித்தன்மை அதிகரிப்பு ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# அமைச்சரவை மாற்றத்தில் சில பிரபலங்களுக்கு சிக்கல்

கொழும்பு, மே 14

தேசிய மக்கள் சக்தியின் உத்தேச முதலாவது அமைச்சரவை மாற்றத்தின்போது தற்போதைக்குப் பிரபலமாக இருக்கும் சில அமைச்சர்களின் துறைகள் மாற்றப்படவுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகிக்கும் ஹரிணி அமரசூரியவை அப்பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று அரசாங்கத்தின் தாய்க் கட்சியான ஜே.வி.பி. நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் எதிர்வரும் சில வாரங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் நிகழக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா

11

# அம்பாளின் சேலை ரூ. 9 இலட்சத்துக்கு ஏலம் போனது

யாழ்ப்பாணம், மே 14

புங்குடுதீவு கண்ணகை அம்பாளுக்கு சாத்திய சேலை 9 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

ஆலய தீர்த்தத் திருவிழாவான நேற்று முன்தினம் ம்பாளின் சேலைகள் ஏலத்தில் விடப்பட்டன.

அப்போதே, ஒரு சேலை ஒன்பது இலட்சம் ரூபாய்விற்கு ஏலம் போனமை குறிப்பிடத்தக்கது.

(அ-05)

# கிளிநொச்சி பிரதேச சபைகளுக்கு தவிசாளர், உபதவிசாளர் நியமனம்

கிளிநொச்சி, மே. 14

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்கவுள்ள நிலையில், அந்த மூன்று சபைகளுக்குமான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பணிமனையில் நடைபெற்றுள்ளது.

மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்

11



## கொழும்பு மாநகர சபை:

# சிக்கலில் ஐ.தே.க.

கொழும்பு, மே 14

கொழும்பு மாநகர சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கொழும்பு மாநகர சபையில் 13 ஆசனங்கள் கிடைத்தன.

குறித்த 13 ஆசனங்களும் பட்டியல் ஆசனங்கள் என்பதன் காரணமாக அவற்றுக்கு ஆட்களைப் பெயரிடுவதில்

11

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேசம் என்ன பதில்?

## மன்னார் தாய்மார் நேற்று கேள்வி

மன்னார், மே 14

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் இன்று மூடிவிட்டன. இன்னும் எத்தனை கண்கள் மூடப்போகின்றனவோ தெரியாது. இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல்

11

# தமிழ் அரசுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பேச்சு

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

மட்டக்களப்பு, மே 14

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிச் சபைகள் தேர்தலில் தமிழ் அரசு கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பேச்சு முன்னெடுக்கப்பட்ட வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் தேசிய

11

# கனடாவில் தமிழ் இனப்படுகொலைச் சின்னம் இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு ஆபத்து

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, மே 14

கனடாவில் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் உடனடியாக இராஜதந்திர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் கனேடிய தூதுவரை அழைத்து முறையாக எதிர்ப்புத்

11

# கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி

ஒட்டாவா, மே 14

ஏப்ரல் 28ஆம் திகதி கனடாவில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலை அடுத்து புதிய பிரதமர் மார்க் கானி தலைமையிலான புதிய அரசின் புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றது.

ட்ரூடோ தலைமையி

11



## மன்னாரில் வெசாக் நிகழ்வு

மன்னார், மே 14

மன்னார் - மாதோட்டம் ரஜமகா விகாரையில் விகாராதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை வெசாக் தின நிகழ்வுகள் நடைட்பெற்றன.

வெசாக் நிகழ்வில் பொலிஸார், இராணுவம் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தானமும் வழங்கப்பட்டது. (அ)

## வடமராட்சி கிழக்கில் தொடர்கின்றது மணல் கொள்ளை!

வடமராட்சி, மே 14

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் குடியிருப்பு பகுதிகளில் மண் கடத்தல் தொடந்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் மணல் திட்டியாக இருக்கும் பகுதிகளில் இருந்து மணல் எடுத்து செல்லப்பட்ட நிலையில், தற்போது கிராமப் பகுதியில் அதிகமாக கட்டடங்கள் அமைப்பதனால், மணல் அனுமதி கொடுக்கப்படாத நிலையில் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் மண் கடத்தல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர். இவ்வாறு மண் கடத்தல் தொடர்ந்தால் குறித்த கிராமப்பகுதியில் பெரும் பள்ளங்கள் ஏற்பட்டு மழைக்காலத்தில் நீர் தேங்கி நிற்பதுடன், வெள்ள அபாயம் காணப்படுவதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# தேர்தல் முடிவு எமக்கு தோல்வியிலும் வெற்றி

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்



யாழ்ப்பாணம், மே 14

தோல்வியிலும் வெற்றி என்ற நிலையில்தான் தற்போது நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபை தேர்தலின் பெறுபேறுகள் அமைந்துள்ளன என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உள்ளூர் அதிகார சபையில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்களை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் தேர்தல் அடைவு நிலை குறித்து ஆராய்ந்ததுடன் கிடைத்த வெற்றிகளை மூலதனமாகக் கொண்டு அடுத்த கட்டம் நோக்கி முன்னேறிச் செல்வது குறித்தும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் கருத்து தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா - உசுப்பேற்றியோ, போலி வாக்குறுதிகளையோ போதை ஏற்றும் சன்மானங்களையோ வாக்காளர்களுக்கு கொடுத்திருக்கவில்லை.

நாம் வழமை போன்றே எமது நிலைப்பாடுகளை வெளிப்படையாக கூறி மக்களிடம் சென்றிருந்தோம். அதன் முடிவுகள் வந்துள்ளன. அவை எமக்கு சார்பாக இல்லாவிடினும் கிடைத்தவை தோல்வியிலும் வெற்றிக்கான சமிக்ஞையாகவே இருக்கிறது.

அதேநேரம் ஆட்சியில் பங்கெடுக்கும் விருப்பம் எமக்கில்லை. குறிப்பாக, தேசிய மக்கள் சக்தி என்ற ஜே. வி.பியிடம் தேசிய நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது அறவே இல்லாது போய்விட்டதுடன் அது மறுக்கப்படுள்ளமையால் உள்ளூர் அதிகார சபைகளில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவை நாம் வழங்கப்போவதில்லை.

இதுவே கட்சியின் முடிவாகவும் இருக்கின்றது.

அதேநேரம் ஏனைய தமிழ் கட்சிகளுக்கான ஆதரவும் அவர்கள் அதிகாரபூர்வமாகக் கோரும் பட்சத்தில் சூழ்நிலையை கருத்தில் கொண்டே எடுக்கப்படும்.

குறிப்பாக இது கட்சியின் எதிர்காலம் மற்றும் மக்களின் நலன்களுடன் தொடர்புடையதாகவே இருக்கும்-என்றார். (அ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; பொலிஸ் உத்தியோகத்தர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 14

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சக உத்தியோகத்தரை வெளிநாட்டில் வேலைக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 14 இலட்சத்து 70ஆயிரம் ரூபாயை பெற்றுக்கொண்டு மோசடி செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் கடந்த 2022ஆம் ஆண்டில் இடம்பெற்றது. ஆனால் மூன்று ஆண்டுகள் கடந்தும் வாக்குறுதியின் படி வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைக்காததால், பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் இது குறித்து முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பேரில், மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ்வழக்கில், சந்தேக நபர் எதிர்வரும் மே 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# முள்ளியவளையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



முல்லைத்தீவு, மே 14

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முள்ளியவளை மேற்கு வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில், முள்ளியவளைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளியவளை மேற்கு வட்டாரக் கிளையின் தலைவர் குமரையா உதயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வு மற்றும் கஞ்சி வழங்கும் செயல்பாட்டில் முள்ளியவளை மேற்கு வட்டாரத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய இரத்தினம் ஜெகதீசன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வல்வெட்டித்துறையில் இந்திர விழா









வடமராட்சி, மே 14

வல்வெட்டித்துறை மக்களால் நேற்று முன் தினம் இந்திர விழா மிகவும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வல்வெட்டித்துறை சிறீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தீர்த்த திருவிழா சித்திரா பௌர்ணமி தினமான நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு இந்திர விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயத்தைச் சூழவுள்ள சுமார் 3 கிலோ மீற்றர் தூர வீதி மின் விளக்கு சோடனைகள், இந்து தெய்வங்களின் உருவங்கள் மின் ஒளி அலங்கரிக்கப்பட்டு பிரமாண்டமாக இருந்தன.

அத்துடன், பத்துக்கும் மேற்பட்ட மேடைகள் அமைக்கப்பட்டு இசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (அ-02)

## கிளிநொச்சியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதி யுத்த நேரத்தில் அங்கிருந்த மக்கள் தமது உயிரை காப்பதற்காக தயாரித்து அருந்திய முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் முகமாகவும் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் நோக்கிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கல் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

## மருதங்கேணி பொலிஸாரின் வெசாக்

வடமராட்சி, மே 14

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு மருதங்கேணி பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த விசேட வெசாக் தின நிகழ்வு நேற்று மருதங்கேணி சந்தியில் நடைபெற்றது. நிகழ்வில் பொதுமக்களுக்கு தானமும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வடமராட்சி கிழக்கு மக்கள், சிறுவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு மருதங்கேணி பொலிஸ் தலைமை அலுவலகத்தில் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.05.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 31

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எதிரிகளை கட்டமைப்பதில் பயனில்லை

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அநுர அலை பற்றிய கட்டுக்கதை இல்லாமலாக்கியிருப்பதாகவும் மீண்டும் வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியத்தின் நிலையான வலிமையை மீண்டும் உறுதிப் படுத்தியிருப்பதாகவும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பில் முதல் கேள்வி, ஓர் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறான முடிவுக்கு வருவது சரியானதா? அடுத்த கேள்வி, தேசிய மக்கள் சக்தி வடக்கு - கிழக்கில் பெரும் வீழ்ச்சியை சந்தித்திருப்பதாகத் தமிழ் அரசியல்வாதிகள் கூறிக்கொண்டிருப்பது எந்தளவுக்கு சரியானது?

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களின்போது, தேசிய மக்கள் சக்தியை ஒரு பிரதான எதிரியாகக் கருதியே தமிழ் கட்சிகள் தங்களுடைய பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன. இன்னொரு வகையில் அச்சமூட்டின. பொதுவாக அச்சமூட்டல்கள் சாதாரண மக்களை அதிகம் பாதிப்பதுண்டு. தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையாக வெற்றி பெற்றால் தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைப்பார்கள் என்றுகூட பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கில் தேசிய மக்கள் சக்தி ஒப்பீட்டடிப்படையில் பின்னடைவுகளை சந்தித்தமைக்கான காரணங்களை பட்டியலிட்; டால், இவ்வாறான பிரசாரங்களுக்கும் ஒரு பங்குண்டு. அதே போன்று, தேசிய மக்கள் சக்தியின் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளும் தேசிய மக்கள் சக்தியின் பின்னடைவில் செல்வாக்குச் செலுத்திய இன்னொரு முக்கிய காரணமாகும்.

தமிழ் கட்சிகள் எதிர்பார்த்தது போன்றே தேசிய மக்கள் சக்தி வடக்கு - கிழக்கில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் சுமந்திரன் கூறுவது போன்று தமிழ்த் தேசியம் மீளவும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எடுத்துக் கொண்டால் - இந்த இடத்தில் எழும் கேள்வி - சரி அடுத்தது என்ன?

ஒரு புதிய எதிரியைக் காண்பித்து தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் முயற்சியில் தமிழ் கட்சிகள் வெற்றி பெற்றிருப்பதாக நோக்கினால், அடுத்த கட்டமாக அரசியலை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறார்கள்? இதற்கு எவரிடமும் பதில் இல்லை. கடந்த காலங்களிலும் தமிழ்த் தேசியத்தின் பெயரால், எதிரிகளை கட்டமைக்கும் அரசியலே முன்னெடுக்கப்பட்டது. அதனால் கண்டது ஒன்றுமில்லை. ஏனெனில், என்னதான் எதிரிகள் பற்றிப் பேசினாலும்கூட, அரசாங்கத்தோடு பேச்சுகளில் ஈடுபடால் எந்தவொரு விடயத்தையும் நகர்த்த முடியாது. மூன்றாம் தரப்பு என்பது எல்லாம் முடிந்துபோன காரியம்.

விடுதலை புலிகள் இயக்கம் அரசியலை ஏகபோகமாக தீர்மானித்த காலத்தில், தமிழ்த் தேசிய அரசியல் என்பது முற்றிலுமாக எதிரிமைய அரசியல்தான். போரை முன்னெடுத்துக் கொண்டு செல்வதற்கு ஒரு வலுவான எதிரி எப்போதுமே தேவைப்பட்டது. ஆனால், ஜனநாயக அரசியலில் வலுவான எதிரிக்கோட்பாடு அடிப்படையிலேயே தவறானது. அத்துடன், அது மக்களை ஏமாற்றும் ஒரு செயலுமாகும். தேசிய மக்கள் சக்தி இன்றைய நிலையில் ஒரு பலமான தென்னிலங்கை கட்சி. பாராளுமன்றத்தில் அரிய பெரும்பான்மையை கொண்டிருக்கிறது. இந்த நிலையில், அவர்களுக்கு எதிராக எவ்வாறான பிரசாரங்களை முன்னெடுத்தாலும்கூட, தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பேசுவதாயின் அவர்களுடன் பேசாமல் தமிழ் கட்சிகளால் என்ன செய்துவிட முடியும்? இதனைன் கருத்தில்கொண்டுதான் தமிழ் கட்சிகள் தங்களின் அரசியலையும் முன்னெடுக்க வேண்டும்.

## கொக்குவில் தென்னாடு சிவ மடத்தில் திங்களன்று நான்கு சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 14

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தில் கடந்த திங்கள் நிறைமதி நாளையொட்டி நான்கு நிகழ்வுகள் ஒரு சேர இடம் பெற்றன. பரிபூரணமடைந்த நல்லை ஆதீன முதல்வரை நினைந்து பிரார்த்தித்தல். அண்மையில் அகவை 60 எய்தி வட மாகாண பிரதம செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற இ. இளங்கோவனுக்கான மதிப்பளிப்பு மேற்கொள்ளல் அண்மையில் வெளிவந்த உயர்தர பரீட்சை பெறுபவர்களின் அடிப்படையில் யாழ். மாவட்ட நிலையில் முதன்மை பெற்ற மாணவர்களை கௌரவித்தல்.



தென்னாடு சஞ்சிகையின் 57 ஆவது இதழ் வெளியீடு என இந்த நிகழ்வுகள் அமைந்தன.

இந்நிகழ்வுகளில் ஓய்வு பெற்ற வடமாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், யாழ்ப்பாணம் சிற்றி காட்வெயார் தொழிலதிபர் சோமசுந்தரம் பிரகதீஸ்வரன் யாழ்.போதனா வைத்திய சாலை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் சந்திரமௌலீசன் லலீசன் இலட்சுமணன் இளங்கோவன் தென்னாடு முதல் இதழினை வழங்கி - தென்னாட்டின் ஐம்பத்து ஏழாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார்.

மணிவிழா கண்ட இ. இளங்கோவனுக்கான மதிப்பளிப்பு உரை, ஆதீன முதல்வர் பற்றிய பிரார்த்தனை உரை மாணவர்களுக்கான பாராட்டுரை என்பவற்றை ஒருசேர ச. லலீசன் வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வுகளில் உயர்தரப் பரீட்சையில் யாழ் மாவட்ட மட்டத்தில் முதல் இடங்களை பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

உயிரியல் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் யமுனானந்தா பிரணவன், இரண்டாம் இடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் யமுனானந்தா சரவணன், வணிகப் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன விஜயசுந்தரம் வருணன், கலைப் பிரிவில் முதல் இடம்பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி மணிவண்ணன் மயூரா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (அ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 14

தெல்லிப்பழை மாவை கலட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக க. நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குரு பூசையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வை தொடர்ந்து இளம் சைவப் புலவர் க. கயிலைவாசன் தடாதகை பிராட்டியார் திரு அவதார படலம் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

## தொழில் நியாய சபை முன்னாள் நீதிபதி விமலராஜா காலமானார்

வடமராட்சி, மே 14

பிரபல சட்டத்தரணியும் ஓய்வு பெற்ற தொழில் நியாய சபை நீதிபதியுமான வேலாயுதம் விமலராஜா அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது 90ஆவது வயதில் காலமானார்.

வடமராட்சி கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட விமலராஜா கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார்.



அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை சிட்னியில் நடைபெறும் என அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 14 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 31
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**இடபம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சொத்து பிரச்னை ஒன்று தீரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிகாரிகளுடன் நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**தனுசு**
பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**கும்பம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். தொழில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும்.

# நெடுந்தீவு மருத்துவமனைக்கு மின்பிறப்பாக்கி!

யாழ்ப்பாணம், மே. 14

நெடுந்தீவு பிரதேச வைத்திய சாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு தேசிய மின்விநியோக கட்டமைப்புடன் இணைக்கப்படாத பிரதேசமாகும். எனவே, இப்பகுதிக்கு மின்விநியோகம் மின்பிறப்பாக்கிகள் மூலமாகவே நடைமுறையில் இருக்கின்றது.

இந்தநிலையில், கடந்த வாரம் முக்கிய மின்பிறப்பாக்கி ஒன்று திடீரென பழுதடைந்தது.

இதன் காரணமாக நெடுந்தீவில் திடீர் மின்தடை ஏற்பட்டது. கடந்த 10ஆம் திகதி இரவு ஏற்பட்ட மின் தடை காரணமாக, நெடுந்தீவு வைத்தியசாலையில் ரோர்ச் லைற் உதவியுடன் அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து வைத்தியசாலை நிர்வாகம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சந்திரசேகர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தது.

பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்களான பவானந்த ராஜா மற்றும் இளங்குமரன் ஆகியோரது தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, புதிய மின்பிறப்பாக்கி ஒன்றை நெடுந்தீவு வைத்திய சாலைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மின்பிறப்பாக்கி விரைவில் நெடுந்தீவுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பலாலியில் பணிபுரிந்தவர் திடீரென மரணம்!

யாழ்ப்பாணம், மே 14

பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்த இராணுவ சிவில் விவசாய உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி - முறுத்தலை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய விதுர சஞ்சீவ மதுரட்ட என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த உத்தியோகத்தர் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவருக்கு காலை திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதனால், இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.





# சித்திரை பௌர்ணமி தினத்தில் உணவு நிலையங்களில் சோதனை

## மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

முல்லைத்தீவு, மே 14

அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி உற்சவத்தை முன்னிட்டு ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட உணவுக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மீது திடீர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி உற்சவம் நேற்று முன்தினம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

ஆலய வளாகத்தில் இருந்த உணவுக்கடைகள், ஐஸ்கிறீம் வாகனங்கள் மற்றும் சுண்டல் வண்டில்கள் போன்றவை மீது குறித்த பரிசோதனை நடவடிக்கை சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் நதிருசன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான லோஜிதன், டிலக்சன் ஆகியோர்களால் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதோடு, உணவு நிலைய உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பொதுச்சுகாதார பரிசோதகர்களால் உணவு விற்பனை நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டன.

(எ)

# கிளிநொச்சியில் வெசாக் வலயம் திறப்பு

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி, இரணைமடுச் சந்திப் பகுதியில் இலங்கை முதலாவது படைப்பிரிவின் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரவு வெசாக் வலயம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் மதத் தலைவர்கள் மாவட்ட செயலாளர் சு. முரளிதரன் முதலாவது படைப் பிரிவின் கட்டளையதிகாரி உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினர், பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வெசாக் தினத்தை முன்னிட்டு தானம் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

(எ)

# இனப்பிரச்னை விடயத்தில் அநுரவும் பழைய பல்லவி!

### குமார் குணரத்தினம் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 14

**தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தென்னிலங்கையின் ஏனைய கட்சிகள் கையாண்ட அணுகுமுறையையே தேசிய மக்கள் சக்தி பின்பற்றி வருகின்றது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் குமார் குணரத்தினம் சுட்டிக்காட்டினார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு-அரசியல் கலாசாரம் மாற்றப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் அதனை முறையாக செயற்படுத்தாததால் தான் பழைய அவதாரங்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அதன்மூலம் அவர்கள் பக்கம் மக்கள் திரும்பிவிட்டனர் என்பது பொருள் அல்ல.

தேசிய மக்கள் சக்தி மீது மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது மக்களால் அக்கட்சிக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

அந்த நம்பிக்கை தற்போது வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. 23 இலட்சம் பேர் வரை தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கவில்லை.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வென்றிருப்பதால் மக்கள் தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை முழுமையாக கைவிடவில்லை என்பதும் தெரிகின்றது.

பெரும்பாலான சபைகளில் ஆட்சியமைப்பதற்குரிய ஆணையை தேசிய மக்கள் சக்தியே பெற்றுள்ளது. 267 சபைகளில் அக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனவே, ஆட்சி அமைப்பதற்குரிய தார்மீக உரிமை அக்கட்சிக்கே உள்ளது. இதனை ஏனைய கட்சிகள் இணைந்து சூழ்ச்சி மூலம் இல்லாது செய்யக்கூடாது. அதற்கு நாம் ஆதரவளிக்கமாட்டோம்.

அதேவேளை, நாட்டின் தற்போதைய அரசியல் வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டால் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்ட கட்சிகள் ஒரேமாதிரியான அரசியல், பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு இணங்கியுள்ளன. அவர்களுக்கிடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும் ஒருமித்த கொள்கையிலேயே உள்ளன. ஐ.நா. தலையீடு தொடர்பான நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை.

ஜனநாயகம் தொடர்பான பிரச்னை, தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் இவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை, பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளன.

எனவே, நாட்டில் தற்போது இரு அரசியல் அணிகள்தான் உள்ளன. ஒன்று வலதுசாரிகள் ஓரணியில் உள்ளனர். வலுவான இடதுசாரியாக நாம் போராடுவோம்-என்றார். (அ)

# பாலியல் குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 14

தெனிநுவர பகுதியில் உள்ள ஒரு பாடசாலை ஆசிரியர் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டில் மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பாடசாலை ஒன்றின் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், ஆங்கிலத்தில் நன்கு படித்தவர் என்பதால், சம்பந்தப்பட்ட சிறுமியுடன் நெருக்கமாகப் நடந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகள் மற்றும் சிறுமியிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் ஆசிரியர் கைது செய்யப்பட்டதாக மாத்தறை வலய சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

தற்போது, சிறுமியை மருத்துவ பரிசோதனைகளுக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் செயல்பாடுகளுக்காக வற்புறுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# சிறைச்சாலையிலிருந்து தப்பிய கைதி நீரில் மூழ்கி உயிரிழப்பு!

கொழும்பு, மே. 14

கண்டி மாவட்டத்தில் உள்ள பல்லேகெலே திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் மாகாவலி கங்கையில் குதித்து தப்பிச் செல்ல முயன்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரகம கும்புக்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று, இந்த கைதி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் செல்வதற்காக மாகாவலி கங்கையில் குதித்துள்ளார்.

இதனையடுத்து சிறைச்சாலை அதிகாரிகளின் சிலர் இணைந்து மாகாவலி கங்கையில் சோதனை செய்த போது, தப்பிச் செல்ல முயன்ற கைதி நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதைக் கண்டுள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பிரதான ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, மே. 14

பிரதான ரயில் பாதையில் பயணிக்கத் திட்டமிடப்பட்ட நான்கு ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இயந்திர ஓட்டுநர்கள் பற்றாக்குறை காரணமாக இந்த இரத்துகள் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, நேற்று காலை திட்டமிடப்பட்ட பல ரயில் சேவைகள் இயக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# சுகாதார நடைமுறைகள் பின்பற்றாத எட்டு தானசாலைகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, மே. 14

முறையான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாத 8 தானசாலைகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் நாடு முழுவதும் பல தானசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அத்தோடு, முறையான அறிவுறுத்தல்களுக்குப் பிறகு மேலும் 17 தானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதாக அதன் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

மேலும் அனைத்து தானசாலைகளும் பொது சுகா தார பரிசோதகர்களால் மேற் பார்வையிடப்பட்டன. (அ)

# கொழும்பு மாநகரை ஆளப்போவது யார்?

கொழும்பு, மே. 14

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையில் தீர்க்கமான பேச்சுக்கள்இவ்வாரம்இடம்பெறவுள்ளன.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியை போன்றே எதிர்க்கட்சிகள் பலவும் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

மே 6 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து 48 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். எனினும், ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகளிலிருந்து 69 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் தனி கட்சியாக தேசிய மக்கள் சக்தியிலிருந்து அதிக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்ற சர்ச்சைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமக்கு அதிகளவான ஆசனங்கள் கிடைத்துள்ளதால் தாமே கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாக ஆளுங்கட்சி தெரிவித்து வருகிறது. எனினும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்க்கட்சிகள், கூட்டணியமைத்து பெரும்பான்மையை உறுதிப்படுத்தி கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் இது குறித்த பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். அந்த வகையிலேயே இவ்வாரமும் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நாடு முழுவதும் அதிகரித்து வரும் விபத்துகளை தடுக்க செயல்திட்டம்

கொழும்பு, மே. 14

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைத் தொடர்ந்து, 16 நிறுவனங்கள் கூட்டாக இணைந்து தயாரிக்கப்பட்ட வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான செயல்திட்டம் ஒன்றை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நுவரெலியா-கம்பளை பிரதான வீதியிலிருந்து வில்சி பள்ளத்தாக்கில் விழுந்து சுமார் 23 பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து ஊடகங்களுக்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவிக்கையில்-மூன்று மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட “வீதி பாதுகாப்பு“ என்ற முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது வீதி தொடர்பான இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டது.

வீதி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பில் உள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள்.

அவர்கள் ஒரு செயல் திட்டத்தைத் தயாரித்துள்ளனர், மேலும் அது அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தப்படும்-என்றார்.

உலக வங்கியின் கூற்றுப்படி, இலங்கை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 38,000 வீதி விபத்துகளைப் பதிவு செய்கிறது. இதன் விளைவாக சுமார் 3,000 இறப்புகள் மற்றும் 8,000 பேர் படுகாயமடைகிறார்கள்.

தேசிய வீதி விபத்து இறப்புகளை 50% குறைக்கும் நிலையான வளர்ச்சி 3.6 இலக்கை அடைய, அடுத்த தசாப்தத்தில் இலங்கை கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# விபத்தில் கான்ஸ்டபிள் பலி!

கொழும்பு, மே. 14

சிலாபம்-கொழும்பு வீதியில் கார் ஒன்று மோதியதில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாரவில ஆதார வைத்தியசா லைக்கு அண்மையில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு பொலிஸ் கான்ஸ் டபிள் மாரவில ஆதார வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட் டார். சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த பொலிஸார் சிலாபம் பொலிஸ் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி யவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, காரைச் செலுத்திய 22 வயதான பல்கலைக்கழக மாணவன், அதில் பயணித்த அவரின் தாய் மற்றும் பாட்டி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர். (அ)

# 40 சபைகளில் நாம் ஆட்சியமைப்போம்!

### கூறுகிறது சுதந்திரக் கட்சி



கொழும்பு, மே. 14

உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு அப்பால், ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் நாம் ஆட்சியமைப்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். அந்த வகையில் 40 உள்ளூராட்சிமன்றங்களில் எம்மால் ஆட்சியமைக்க முடியும் என சுதந்திர கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகிவண்ண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிமன்றங்களில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் சபைகளை நிறுவுதல், கூட்டணியமைத்தல் குறித்து அரசியல் குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கமையவே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். வேட்புமனு தாக்கலின் போது இடம்பெற்ற தவறுகளை நிவர்த்தி செய்து கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஏனைய கட்சிகள் சபைகளை அமைப்பதற்கு எமது ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். அத்தோடு சில உள்ளூளுராட்சிமன்றங்களில் ஏனையோரின் ஒத்துழைப்புடன் எமக்கு ஆட்சியமைக்கக் கூடிய நிலைமை கூட காணப்படுகிறது.

இது தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். சில தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சிமன்றங்களின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படக் கூடிய சேவைகள் தொடர்பிலேயே விசேட அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

சுமார் 100 உள்ளூராட்சி மன்றங்களில் எமது ஆதரவின்றி எவராலும் சபைகளை நிறுவ முடியாது. எவ்வாறிருப்பினும் நாம் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை.

உள்ளூராட்சிமன்றங்கள் தொடர்பில் ஆளுந்தரப்பினர் சில பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். தமக்கு வாக்களிக்காவிட்டால் நிதி ஒதுக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அச்சுறுத்தினார்.

அவரைப் பின்பற்றியே ஏனையோரும் இது போன்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புடன் எம்மால் 40 சபைகளில் ஆட்சியமைக்க முடியும்-என்றார். (அ)

## அவுஸ்திரேலிய விபத்தில் இலங்கை இளைஞன் பலி!

கொழும்பு, மே. 14

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்தார்.

டாஸ்மேனியாவின் - டிராவல்லர்ஸ், ரெஸ்ட் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இரவு இந்த விபத்து இடம்பெற்றதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்த நபர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜயதுங்கவின் மகன் தாரக விஜயதுங்க எனத் தெரிய வந்துள்ளது.

28 வயதான அவர், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அரசியலமைப்பு பேரவைக்கு விரைவில் புதிய செயலாளர்!

கொழும்பு, மே. 14

அரசியலமைப்புப் பேரவைக்கு புதிய செயலாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

கடந்த 2023ஆம் ஆண்டு தொடக்கம் அரசியலமைப்புப் பேரவையின் செயலாளராக இருந்த, பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் தன் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அரசியலமைப்புப் பேரவைக்கு அவர் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அந்தப் பதவிக்குப் பொருத்தமான புதியவர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் தற்போதைக்கு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

அரசாங்கத்துக்கு நெருக்கமான ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்துக் கொள்ள முடியாத பட்சத்தில், பத்திரிகை விளம்பரங்கள் வாயிலாக பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பிரசாரச் செலவு விவரங்களை 21 நாள்களுக்குள் சமர்பிக்குக!

### கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு பணிப்பு

கொழும்பு, மே. 14

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 21 நாட்களுக்குள் தேர்தல் பிரசார செலவுகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஆவணங்களை உறுதிப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளின் நான்கு ஆண்டுகாலப் பதவிக்காலம் 2025.06.02ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும். ஆகவே கொழும்பு மாநகர உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்பதில் தோற்றம் பெற்றுள்ள சிக்கல்களுக்கு உடன் தீர்வு காண வேண்டியது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 75,589 பேர் போட்டியிட்டனர்.

உள்ளூராட்சிச் சபைகளின் முதல் கூட்டம் ஜூன் 2ஆம் திகதி கூடவேண்டும். கொழும்பு மாநகர சபை உட்பட ஒரு சில மாநகர சபைகளில் தோற்றம் பெற்றுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காண்பது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (அ)

## தீ விபத்தில் யுவதி பலி!

கொழும்பு, மே. 14

கொட்டாவ, விஹார மாவத்தையில் உள்ள ஒரு வீட்டில் இருந்த 19 வயது யுவதி தீ விபத்தில் உயிரிழந்துள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யுவதி உட்பட குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் வீட்டில் வசித்து வந்த நிலையில், அவர்களில் மூவர் நேற்று முன் தினம் இரவு வெசாக் காண வெளியே சென்றிருந்தபோது, வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது.

அவ்வேளையில், வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த யுவதி தீயில் கருகி உயிரிழந்தமை தெரியவந்தது.

உயிரைிழந்தவர் பிரதம்மணி துரஞ்சா என்ற 19 யுவதி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

## அமைச்சர்கள் சிலருக்கு ஜனாதிபதி கட்டுப்பாடு

கொழும்பு, மே. 14

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடுமையான அதிருப்தி கொண்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

பொதுமக்கள் மத்தியிலும், ஊடகங்களிலும் சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிடும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் தொடர்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு அதிருப்தி கொண்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் நிலந்தி கொட்டஹச்சி உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர் ஒருவர், இரண்டு அமைச்சர்கள் ஆகியோரை வரவழைத்து இது குறித்து தனது அதிருப்தியை ஜனாதிபதி நேரடியாகவே வெளிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மேற்குறித்த அரசியல்வாதிகளை எந்தவொரு காரணத்தைக் கொண்டும் இனிவரும் காலங்களில் ஊடக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விட வேண்டாம் என்று ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஊடகப் பொறுப்பாளர் விஜித ஹேரத் ஆகியோருக்கும் உத்தரவிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

(அ)

## அதிகமாக சத்தங்களை எழுப்பிய 16 மோட்டார் சைக்கிள் பறிமுதல்!

கொழும்பு, மே. 14

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைப் பயன்படுத்தி அசெம்பிள் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நான்கு அதியுயர் திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட 16 மோட்டார் சைக்கிள்களை பண்டாரகம பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இந்த மோட்டார் சைக்கிள்களை அதிக சத்தங்களை எழுப்பி ஓட்டிச் சென்றுள்ளனர். இதனால் வெசாக் நிகழ்வுகளில் பங்கேற்கச் சென்ற பொதுமக்களுக்கும், வீதியில் சென்ற ஏனைய வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அதன்படி, சம்பந்தப்பட்ட 16 மோட்டார் சைக்கிள்களுடன் 16 இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட நான்கு அதியுயர் திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவுத் தகடுகளை சோதனை செய்தபோது சந்தேகத்துக்குரியதாக இருப்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், பொலிஸார் பறிமுதல் செய்த ஏனைய அனைத்து மோட்டார் சைக்கிள்களிலும் சைலன்சர்கள் அகற்றப்பட்டுள்ளதோடு, வீதியில் வாகனத்தை ஓட்டும்போது பாதசாரிகளை அச்சுறுத்தும் விதத்தில் சத்தத்தை ஏற்படுத்தும் வகையில் ஏனைய பாகங்கள் இணைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொரலஸ்கமுவ, கெஸ்பேவ, பண்டாரகம, தொடங்கொட, களுத்துறை, ஹோமாகம மற்றும் இங்கிரிய உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

## நாட்டில் ஆரோக்கியமான நிலையில் காற்றின் தரம்!

கொம்பு, மே. 14

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று காற்றின் தரம் ஆரோக்கியமான நிலையில் காணப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு அத்துடன், வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், அடுத்த 24 மணித்தியாலங்களுக்குக் காற்றின் தரச் சுட்டெண் 33 - 80 இற்கும் இடையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் ஆரோக்கியமான நிலையில் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு, குருநாகல், கண்டி, கேகாலை, காலி, புத்தளம், பதுளை, களுத்துறை மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் காற்றின் தரம் மிதமான நிலையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகமாகப் போக்குவரத்து நெரிசல் உள்ள வேளைகளில், குறிப்பாகக் காலை 8 மணி முதல் 9 மணி வரை மற்றும் பகல் வேளையில் 3 மணி முதல் 4 மணி வரை காற்றின் தரக் குறியீடு குறைவடைந்து காணப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

பஸ் விபத்தில் சிக்கியதில்

# படிப்படியாக தேறும் ஆறு மாதக் குழந்தை

கொழும்பு, மே. 14

கொத்மலை, ரம்பொடை, கெரண்டி எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்த நிலையில், மீட்கப்பட்ட ஆறு மாதக் குழந்தையின் உடல்நிலை படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில், கம்பளை ஆதார மருத்துவமனையில் இருந்து பேராதனை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட மூன்று குழந்தைகளில் ஒன்றான ஆறு மாத குழந்தை தீவிர சிகிச்சையில் இருந்த நிலையில் குழந்தையின் உடல்நிலை படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாக பேராதனை போதனா மருத்துவமனையின் இயக்குநர் ஏ.எம்.எஸ் வீரபண்டார தெரிவித்தார்.

கம்பளை மருத்துவமனையில் இருந்து ஆறு மாத குழந்தை, ஆறு மற்றும் 11 வயதுடைய இரண்டு குழந்தைகள் தனது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி அநுரவுக்கு தற்துணிவு கிடையாது!

விமல் வீரவன்ஸ கருத்து



கொழும்பு, மே. 14

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிவுடன் செயற்பட்டார் எனவும் அந்த தற்துணிவு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கிடையாது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் தவறான அரசியல் தீர்மானம் எடுத்ததை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அதனையே நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பெரும்பான்மை பலம் உள்ளது என்ற ஆணவத்தில் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது.

2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் பெரும்பான்மை பலம் இருந்ததையும், அந்த பலம் இரண்டாண்டுக்குள் பலவீனமடைந்ததையும் அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் அரசாங்கம் அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் இதுவரை முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாயின் அதற்கு இந்தியாவின் அனுமதியை பெறவேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த காலங்களில் இதனை காட்டிலும் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பல ஒப்பந்தங்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்த அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விவகாரத்தில் அரசாங்கம் நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அடிபணிந்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு ஊடாக இதனை எதிர்வரும் மாதமளவில் விளங்கிக்கொள்ள முடியும்-என்றார். (அ)

# இந்திய தூதுவரை சந்தித்தார் ஜீவன்!



கொழும்பு, மே. 14

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை, இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடினார்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற குறித்த இச்சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

"இந்திய- இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் மலையகத்தில் இந்திய வம்சாவளி தமிழர்களின் மேம்பாட்டிற்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு குறித்து இந்திய தூதுவருடன் கலந்துரையாடினேன்." என்று ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

"எமது சமூகத்திற்கான நீண்டகாலமான நட்பு மற்றும் அர்ப்பணிப்புக்குகளுக்கு இந்தியாவுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டேன்." எனவும் அவர் கூறினார். (அ)

# விபத்தில் 20 பேர் காயம்!

கொழும்பு, மே. 14

யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன் தினம் இரவு அலதெனிய, யடிஹலகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பரிகம, கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ரம்பொடையில் பஸ் விபத்து விசாரணைக்கு விசேட குழு

கொழும்பு, மே. 14

ரம்பொடை - கெரண்டி எல்ல பகுதியில் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மேலும் நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடங்குவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பஸ் விபத்துக்கான காரணங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்கில் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொத்மலை, ரம்பொட, கெரண்டியெஎல்ல பகுதியில் 22 பேரின் உயிரைப் பறித்த விபத்து, பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக நிகழவில்லை என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன்படி, பஸ்ஸில் அளவுக்கு மீறிய பயணிகள் பயணித்தமை மற்றும் அதிக களைப்பு காரணமாக சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டமை ஆகியவை விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஜாலிய பண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இச்சம்பவம் தொடர்பாக விசேட குழு மூலம் தற்போது விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மே மாத முதல் வாரத்தில் மட்டும் 33,910 வெளிநாட்டு சுற்றுலாவிகள்!

கொழும்பு, மே. 14

2025 மே மாதத்தின் முதல் வாரத்தில் 33,910 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தனது புள்ளிவிவரங்களில் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு இதுவரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 930,794 ஆக அதிகரித்துள்ளது.

வழக்கம் போல், குளிர்காலம் முடிவடைந்த நிலையில், மேற்கத்திய நாடுகளிலிருந்து ஆசிய பிராந்தியத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கு தினமும் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் 5,000 இற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இருப்பினும், மே 1 முதல் மே 7 வரையிலான வாரத்தை ஆய்வு செய்தபோது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இதே வாரத்தை விட 2025 ஆம் ஆண்டில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்பது விசேட அம்சமாகும்.

2023ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை 18,761 ஆகவும், 2024 ஆம் ஆண்டில், இது 28,526 ஆகவும் பதிவாகியுள்ளது.

2025 மே மாதத்தின் முதல் வாரத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 33,910 ஆகும்.இதற்கிடையில், 2025 ஜனவரி-ஏப்ரல் காலகட்டத்தில் ஈட்டப்பட்ட மொத்த சுற்றுலா வருமானம் 1,379 மில்லியன் அமெரிக்க டொலர் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா வருவாயான 1,251.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது 10.2 வீதம் அதிகமாகும்.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சுற்றுலா வருமானம் 646.1 மில்லியன் அமெரிக்க டொலர் என்று இலங்கை மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# நாடு முழுவதிலும் உப்பு தட்டுப்பாடு!

கொழும்பு, மே. 14

உப்பு இறக்குமதி தாமதமானதன் காரணமாக சந்தையில் உப்பு தட்டுப்பாடு நிலவுவதாக உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

30 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருந்தபோதும் அது தாமதமாகியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக சந்தையில் உப்பு தட்டுப்பாட்டை காணக்கூடியதாக உள்ளதாக அவர் கூறினார்.எதிர்வரும் வாரத்தில் குறித்த உப்பு கிடைத்த பின்னர் உப்பு தட்டுப்பாடு கட்டுப்படுத்தப்படும் என உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

# நினைவேந்தலுக்கு வந்தவர்களை அச்சுறுத்திய பொலிஸ் அதிகாரி!



மட்டக்களப்பு, மே 14

**மட்டக்களப்பில் தமிழின அழிப்பு வார நிகழ்வு 12ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அங்கு சிவிலுடையில் வந்து மக்களை அச்சுறுத்தும் வகையில் படம், வீடியோ எடுத்த பொலிஸ் உத்தியோகத்தர், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களால் எச்சரிக்கப்பட்டதை தொடர்ந்து அங்கிருந்து வெளியேறினார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பில் பெருமளவான மக்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சத்துருக்கொண்டான் நினைவுத்தூபியில் இந்த நினைவேந்தல் வாரம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது அங்கு சிவில் உடையில் வந்த கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்படும் ஒருவர் நிகழ்வினையும் நிகழ்வுக்கு வந்தவர்களையும் படம் எடுத்ததுடன் அங்கு நடைபெற்ற நிகழ்வுகளையும் வீடியோ எடுத்து அச்சுறுத்தும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பில் அவதானித்த சமூக செயல்பாட்டாளர் செல்வகுமார், பொலிஸ் உத்தியோகத்தரை நோக்கி "நாங்கள் அமைதியான முறையில் எங்கள் உறவுகளை நினைவுகூரும் நிகழ்வை நடத்திக்கொண்டிருக்கும்போது இங்குவந்து ஏன் இவ்வாறான பதிவு செய்யும் நடவடிக்கைகளை எடுத்து மக்களை அச்சுறுத்துகின்றீர்கள்" என்று கேள்விகளை எழுப்பியதுடன் அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிநாத்தும் "உங்களுக்கு இவ்வாறான செயல்பாடுகளை யார் செய்யச்சொல்லி அனுப்பியிருந்தார்கள்" என்ற வகையான கேள்விகளை கேட்டபோது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அங்கிருந்து சென்றார்.

நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு அரசாங்கம் தடைகளை விதிக்காத போதிலும் பொலிஸார் இவ்வாறான நிகழ்வுகளை குழப்பும் வகையில் செயல்படுவதாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (எ)



# 15 கைதிகள் விடுதலை

மட்டக்களப்பு, மே 14

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 14 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக 15 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம அத்தியட்சகர் உள்ளிட்ட சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டணைப் பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# குளிர்பானம் வழங்கிய பொலிஸார்

திருகோணமலை, மே 14

மூதூர் பொலிஸ் நிலைய பொலிஸா ரின் ஏற்பாட்டில் வெசாக் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதான வீதி யில் வைத்து குளிர்பானம் வழங்கப்பட்டது.

இன, மத பேதங்களுக்கு அப்பால் வீதியால் பயணித்த பொதுமக்கள் குளிர்பானத்தை மகிழ்ச்சியோடு வாங்கிப் பருகினர். (எ)



# ஐஸ் போதைப்பொருள் விற்ற 25 வயது பெண் கைதானார்!

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறந்துறைச்சேனை பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை நிலையமான வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 5 கிராம் 670 மில்லிக் கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பெண் வியாபாரி ஒருவரை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து பிறந்துறைச்சேனை பிரதேசத்திலுள்ள குறித்த வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய பெண் எனவும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இவரது உறவினர்கள் 4 பேர் ஏற்கனவே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் விசேட வெசாக் தின நிகழ்வு

கல்முனை, மே 14

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த விசேட வெசாக் தின நிகழ்வு பொலிஸ் நிலைய வளாகத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.கபூர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மற்றும் வீதியால் பயணித்த பயணிகள் உள்ளிட்டோர்களுக்கு மரவள்ளிக் கிழங்கு தானம் வழங்கப்பட்டது.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வேப்பையடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, மத்திய முகாம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு பொலிஸ் தலைமை அலுவலகத்தில் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. (எ)

# தலைமைப் பொறுப்பை ஏற்க தமிழ் பேசும் கட்சிஞுடன் பேச்சு

## ரிஷாத் எம்.பி. தெரிவிப்பு

கிண்ணியா, மே 14

பல சபைகளில் தலைமைப் பொறுப்பை ஏற்க, முதலில் தமிழ் பேசும் கட்சிகளுடன் கட்சியின் தலைமைத்துவம் பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை கிண்ணியா பெரியாற்றுமுனை நகர சபைக்கு சொந்தமான கட்டடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களாக வெற்றியீட்டியவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், முத்து முஹம்மது மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ரிஷாத் எம். பி., "சில சபைகளில் பிரதித் தவிசாளர்களை பெறுவதற்கும் சில சபைகளில் ஆட்சியின் பங்காளர்களாக இருப்பதற்கும் செயல்பட்டு வருகிறோம்.



குறிப்பாக வடக்கு - கிழக்கு மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வாக்களித்த மக்களுக்காக எமது கட்சி சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதேபோல கட்சியினுடைய வேட்பாளர்கள் அரும்பாடுபட்டு தங்களுக்காகவும் கட்சிக்காகவும் ஒன்றுபட்டு வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன்.

அதிகபட்ச ஆதரவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா முல்லைத்தீவாக இருக்கலாம், இதில் ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவும் பேச்சுக்களில் ஈடுபடுகிறோம்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நல்ல சபைகளை உருவாக்கி அதன் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் உச்ச பயனை பெற்றுக்கொடுப்போம்.

எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கான மாவட்டத் தலைமைத்துவம் மற்றும் மத்திய குழு உள்ளிட்டவற்றை உயர்பீட ஒன்று கூடலின் பின்பு முடிவுகளை எடுப்போம்.

இம்முறை திருகோணமலை மாவட்டம் உள்ளூராட்சித் தேர்தலில் நல்லதொரு முடிவைப் பெற்று மாற்றம் கண்டுள்ளது"- என்றார். (எ)

# தாக்குதல் தற்காலிகமாகவே நிறுத்தம் இனியும் அத்துமீறினால் தகுந்த பதிலடி

## பாகிஸ்தானுக்கு இந்திய பிரதமர் மோடி எச்சரிக்கை

புதுடில்லி, மே 14

**அணு ஆயுத மிரட்டல் இனி செல்லாது. இராணுவ நடவடிக்கையை தற்காலிகமாகவே நிறுத்தி வைத்திருக்கிறோம். பாகிஸ்தான் அத்துமீறினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



பிரதமர் மோடி நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறுகையில், கடந்த சில நாட்களில் இந்தியாவின் வலிமையை ஒட்டுமொத்த உலகமும் பார்த்து வியப்பில் ஆழ்ந்தது. இந்த நேரத்தில் முப்படைகளுக்கும் வீரவணக்கம் செலுத்துகிறேன். நமது உளவு அமைப்புகள், விஞ்ஞானிகளுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஒப்ரேஷன் சிந்தூர் மூலம் நமது இலட்சியம் நிறைவேறியுள்ளது. நமது வீரர்கள் மிகப்பெரிய வெற்றியை ஈட்டித்தந்துள்ளனர். இந்த வெற்றியை நாட்டின் அனைத்து தாய்மார்கள், சகோதரிகள், மகள்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

நமது சகோதரிகள், மகள்களின் குங்குமத்தை அழிப்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படும் என்பது அனைத்து தீவிரவாத அமைப்புகளுக்கும் தெள்ளத் தெளிவாக இப்போது உணர்த்தப்பட்டுள்ளது.

ஒப்ரேஷன் சிந்தூர் என்பது வெறும் பெயர் கிடையாது. இது கோடிக்கணக்கான இந்தியர்களின் உணர்ச்சி. கடந்த 7ஆம் திகதி அதிகாலை பாகிஸ்தானில் செயல்பட்ட தீவிரவாத முகாம்கள் துல்லிய தாக்குதல்கள் மூலம் அழிக்கப்பட்டன. இதுபோன்ற தண்டனையை அவர்கள் கனவிலும் நினைத்து பார்த்திருக்க மாட்டார்கள்.

நீண்டகாலமாக பாகிஸ்தானின் பாவல்பூரும் முர்டேவும் சர்வதேச தீவிரவாதத்தின் பல்கலைக்கழகங்களாக திகழ்ந்தன. அமெரிக்காவின் இரட்டை கோபுரத் தாக்குதல், லண்டன் சுரங்கப் பாதை ரயில்கள் மீதான தாக்குதல், பஹல்காம் தாக்குதல் உட்பட இந்தியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கான சதித் திட்டங்கள் அனைத்தும் பாவல்பூர், முர்டேவில் உள்ள தீவிரவாத முகாம்களில் தீட்டப்பட்டன.

எனவே, அங்கு செயல்பட்ட தீவிரவாத அமைப்புகளின் தலைமை அலுவலகங்களை அழித்து தரைமட்டமாக்கி உள்ளோம். இதில் 100இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்திய எல்லைகளில் உள்ள குருத்வாராக்கள், கோவில்கள், கல்வி நிறுவனங்கள், வீடுகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்திய இராணுவத் தளங்களை குறிவைத்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பாகிஸ்தான் இராணுவம் பெரும் எண்ணிக்கையில் ட்ரோன்கள், ஏவுகணைகளை ஏவியது. அவை அனைத்தும் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்திய இராணுவத்தின் வலிமையைப் பார்த்து ஒட்டுமொத்த உலகமும் வியப்பில் ஆழ்ந்திருக்கிறது. பாகிஸ்தான் இராணுவத்தால் இந்தியாவின் எல்லைப் பகுதிகளை மட்டுமே தாக்க முடிந்தது. ஆனால், இந்திய இராணுவம் பாகிஸ்தானின் இதயத்தின் மீதே தாக்குதல் நடத்தியது. இந்திய ஏவுகணைகள், ட்ரோன்கள் பாகிஸ்தான் விமானப் படைத் தளங்களை மிகத் துல்லியமாக தாக்கின. கனவிலும் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு பாகிஸ்தான் விமானப்படைத் தளங்கள் சேதமடைந்திருக்கின்றன - என்றார். (எ)

# அமெரிக்கா- சீனா இடையிலான வர்த்தக போர் முடிவுக்கு வயுந்தது

ஜெனிவா, மே 14

அமெரிக்காவும் சீனாவும் பரஸ்பரம் 115 சதவீதம் வரியைக் குறைத்துள்ளன. இதன் காரணமாக இரு நாடுகள் இடையிலான வர்த்தகப் போர் முடிவுக்கு வந்தது. உலகம் முழுவதும் சுமார் 180இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான வரி விகிதங்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டார். இதன்படி சீனப் பொருட்களுக்கு 34 சதவீத வரி விதிக்கப்பட்டது. இதற்கு பதிலடியாக அமெரிக்க பொருட்களுக்கு 34 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படும் என்று சீன அரசு அறிவித்தது.

இதன்பிறகு இரு நாடுகளும் தொடர்ச்சியாக வரி விகிதங்களை அதிகரித்தன. இறுதியில் சீனப் பொருட்களுக்கு 145 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது. சீன அரசு சார்பில் அமெரிக்க பொருட்களுக்கு 125 சதவீத வரி விதிக்கப்பட்டது. இரு நாடுகளுக்கு இடையே கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக வர்த்தகப் போர் நீடித்து வந்தது. இதன்காரணமாக சுமார் 600 பில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

இதனிடையே சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் அமெரிக்கா, சீனாவைச் சேர்ந்த உயரதிகாரிகள் வரிவிதிப்பு தொடர்பில் விரிவான பேச்சு நடத்தினர். கடந்த 11ஆம் திகதி இரு தரப்பு இடையே உடன்பாடு எட்டப்பட்டது. இது குறித்து அமெரிக்கா, சீனா தரப்பில் ஜெனிவாவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

தற்போது அமெரிக்கா மற்றும் சீன அரசுகள் தரப்பில் பரஸ்பரம் 115 சதவீதம் வரிகுறைப்பை அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி சீனப் பொருட்களுக்கு அமெரிக்க அரசு தரப்பில் 30 சதவீத வரி விதிக்கப்படும். இதேபோன்று அமெரிக்கப் பொருட்களுக்கு சீன அரசு தரப்பில் 10 சதவீதம் வரி விதிக்கப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அணு ஆயுத போரை நிறுத்தியது அமெரிக்கா!

வாஷிங்டன், மே 14

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அணு ஆயுதப் போரை அமெரிக்காவே தடுத்து நிறுத்தியதாக அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,



“இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் சார்ந்து அமெரிக்க அரசு நிர்வாக ரீதியாக முக்கிய பங்காற்றியது. இரு தரப்புக்கும் வர்த்தக ரீதியான அழுத்தம் கொடுத்து போரை தவிர்க்கச் செய்தோம். இந்தப் போர் நிறுத்தம் நிரந்தரமானதாக இருக்கும் என கருதுகிறேன். இதன் மூலம் அணு ஆயுதங்களை அதிகம் கொண்டுள்ள நாடுகளான இந்தியா - பாகிஸ்தான் இடையே போரை தடுத்து நிறுத்தினோம். அது நடக்காமல் போயிருந்தால் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

இந்த மோசமான மோதலை அமெரிக்கா தவிர்க்க செய்துள்ளது. அதை எண்ணி பெருமை கொள்கிறேன். இந்தியா - பாகிஸ்தான் இடையே அதிகளவில் வர்த்தகம் மேற்கொள்ளவுள்ளோம். இது தொடர்பில் இந்தியாவுடன் பேசி வருகிறோம். விரைவில் பாகிஸ்தானுடன் பேசவுள்ளோம்” -என ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

“தண்ணீரும் இரத்தமும் ஒரே நேரத்தில் பாயாது”

# ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு

புதுடில்லி, மே 14

உலக நாடுகளுக்கு தெளிவாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தீவிரவாதம், ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப்படும். வேறு எந்த விடயம் குறித்தும் அந்த நாட்டுடன் பேச்சு நடத்தப்படாது- இவ்வாறு அறிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

தண்ணீரும் இரத்தமும் ஒரே நேரத்தில் பாயாது. வர்த்தகமும் தீவிரவாதமும் ஒருசேர பயணிக்க முடியாது. அணு ஆயுத பூச்சாண்டிக்கு அஞ்ச மாட்டோம். தீவிரவாதத் தாக்குதலுக்கு எங்களது பாணியில் தகுந்த பாடம் கற்பிப்போம்.

இது புத்தர் பிறந்த பூமி. நாங்கள் அமைதியை விரும்புகிறோம். வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க விரும்புகிறோம். உலகத்தின் நன்மையை மட்டுமே விரும்புகிறோம் என்றும் மோடி கூறினார்.

பிரதமர் மோடி நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இராணுவ தளபாடங்களுடன் விமானம் அனுப்பப்படவில்லை

## பாகிஸ்தானுக்கு உதவியதை மறுத்தது சீனா

பீஜிங், மே 14

சீனாவிலிருந்து பாகிஸ்தானுக்கு இராணுவத் தளவாடங்களுடன் சரக்கு விமானம் அனுப்பப்பட்டதாக வெளியாகிய செய்தியை அந்த நாடு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பில் சீன பாதுகாப்பு அமைச்சின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் திங்கட்கிழமை வெளியிடப்பட்ட பதிவு ஒன்றில், ‘சீன இராணுவம் திங்களன்று தனது மிகப் பெரிய இராணுவ சரக்கு விமானம் மூலம் பாகிஸ்தானுக்கு ஆயுதத் தளவாடங்களை எடுத்துச் சென்றதாக வெளியான செய்தி உண்மையல்ல. மக்கள் விடுதலை இராணுவ விமானப் படை, அதன் சியான் வை - 20 இராணுவப் போக்குவரத்து விமானம் மூலம் பாகிஸ்தானுக்கு இராணுவ தளவாடங்களை எடுத்துச் சென்றதாக வெளியான செய்தி உண்மையல்ல.

இத்தகைய அறிக்கைகள் உண்மைக்குப் புறம்பானவை. இணையம் சட்டத்துக்கு அப்பாற்பட்டது அல்ல. இராணுவம் தொடர்பான வதந்திகளை உருவாக்கி பரப்புபவர்கள் சட்டபூர்வமாக பொறுப்பேற்கப்படுவார்கள்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உடனான மோதலை அடுத்து, பாகிஸ்தான் இராணுவ ரீதியாக பெரும் இழப்பைச் சந்தித்துள்ள நிலையில், அது அவசரமாக இராணுவத் தளவாடங்களைப் பெற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக செய்திகள் வெளியாகின. இதன் காரணமாக, பாகிஸ்தானுக்கு உதவ அதன் நட்பு நாடான சீனா முன்வந்துள்ளதாகவும், இதன் காரணமாகவே, இராணுவ உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இந்த நிலையில், சீனா அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. (எ)

# பாகிஸ்தான் இராணுவத்தின் 51 இடங்களை தாக்கினோம்

## பலுசிஸ்தான் விடுதலைப் படை

குவெட்டா, மே 14

பாகிஸ்தான் இராணுவத்தின் 51 இடங்களைத் தாக்கினோம் என்று பலுசிஸ்தான் விடுதலைப் படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் தென்மேற்கில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்கக் கோரி பலுசிஸ்தான் விடுதலைப் படை என்ற பெயரில் கிளர்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இந்த நிலையில், அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜீயந்த் பலூச் கூறுகையில், ”இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உச்சத்தில் இருந்தபோது ஆக்கிரமிப்பு பலுசிஸ்தானில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்புக்கு எதிராக 71 ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தினோம்.

சமீபத்திய இந்தத் தாக்குதல் 51இற்கும் மேற்பட்ட இடங்களில் பல மணி நேரம் நீடித்தது. எதிரியை அழிப்பது மட்டுமே இந்தத் தாக்குதலின் நோக்கமல்ல. தற்காப்பு நிலைகள் மற்றும் தயார் நிலையை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்”- என்றார்.

இந்தியாவின் ஆதரவை நாங்கள் பெற்றால் இந்தத் தீவிரவாத அரசை (பாகிஸ்தானை) பலூச் தேசத்தால் ஒழிக்க முடியும். இது, அமைதியான - வளமான மற்றும் சுதந்திர பலுசிஸ்தான் உருவாக வழிவகுக்கும் என்று பலுசிஸ்தான் விடுதலைப் படை அறிவித்துள்ளது. (எ)



# டெஸ்ட் கிரிக்கெட்: விராட் கோலி ஓய்வு

புதுடில்லி, மே 14

இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தை விராட் கோலி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் (பி.சி.சி.ஐ.) தெரிவித்திருந்த நிலையில் இந்த ஓய்வு அறிவிப்பு வந்துள்ளது.

முன்னதாக, இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு அனுபவம் வாய்ந்த வீரர் விராட் கோலி இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதால் அவரது ஓய்வு முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு பி.சி.சி.ஐ. தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், கோலி தனது விருப்பத்துக்கு முன்னிலை கொடுத்து ஓய்வை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் கோலி தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில், "14 ஆண்டுகளுக்கு முன்னர் நான் டெஸ்ட் கிரிக்கெட் ஆடினேன். டெஸ்ட் கிரிக்கெட் பயணம் என்னை இவ்வளவுதூரம் கூட்டிச் செல்லும் என்று நான் நினைத்ததில்லை. அது என்னை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி, என்னை செதுக்கி, எனக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. அந்தப் பாடங்களை நான் வாழ்நாள் முழுவதும் கொண்டு செல்வேன்.

வெள்ளை நிற ஆடையில் விளையாடுவது எப்போதும், ஆழமான உணர்வை தரும். டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது என்பது எளிதானது அல்ல. ஆனால், இந்தக் கடினமான முடிவை நான் சரியான நேரத்தில் எடுத்துள்ளேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நான் என்னால் இயன்றதை எல்லாம் கொடுத்துள்ளேன். பதிலுக்கு அது எனக்கு நான் எதிர்பார்க்காததை எல்லாம் தந்தது.

நன்றி நிறைந்த இதயத்துடன் விடைபெறுகிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும், எனது சகாக்களுக்கும் என்னை ஆளாக்கியவர்களுக்கும் நன்றி. என்னுடைய டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை எப்போதும் புன்னகையுடன் திரும்பிப் பார்ப்பேன்"- என்று பதிவிட்டுள்ளார். (எ)

இந்திய டெஸ்ட் அணியின்

# "துணைத் தலைவராக கில்லை நியமிக்கலாம்"



லண்டன், மே 14

இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணியின் தலைவராக சுப்மன் கில் நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், இது குறித்து தனது கருத்தை முன் னாள் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் மைக் கல் வோகன் பகிர்ந்துள்ளார்.

"சுப்மன் கில் இப்போதைக்கு தலைக்கு உரிய வீரர் அல்ல. ஆகவே, அவரை துணைத் தலைவராக நியமிக்கலாம்" என்று மைக்கல் வோகன் பரிந்துரைத்துள்ளார். அவர் தன் எக்ஸ் தள பதிவில், "இங்கிலாந்து தொடருக்கான இந்திய அணியைத் தெரிவு செய்யும் பொறுப்பு என்னிடம் இருந்தால் சுப்மன் கில் துணைத் தலைவராக இருக்கலாம் என்று கருதுவேன்"- எனக் கூறியுள்ளார். (எ)

# உங்கள் போராட்டங்கள், கண்ணீரை அறிவேன்!

## கோலி குறித்து அனுஷ்கா சர்மா உருக்கம்

மும்பை, மே 14

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி அறிவித்தார். இந்த நிலையில், அது தொடர்பில் சமூக வலைத்தளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார் கோலியின் மனைவியும், நடிகையுமான அனுஷ்கா சர்மா.

"எல்லோரும் உங்களின் சாதனைகள் மற்றும் மைல்கல்கள் குறித்துதான் பேசுவார்கள். ஆனால், யாரும் காணாத உங்களது போராட்டங்கள், வெளிக்காட்டாத உங்களது கண்ணீர், கிரிக்கெட் மீது நீங்கள் கொண்டுள்ள நேசத்தையும் நான் அறிவேன். அது என் நினைவில் உள்ளது. ஒவ்வொரு டெஸ்ட் தொடருக்கு பிறகும் நீங்கள் பக்குவமடைந்தீர்கள். சர்வதேச கிரிக்கெட்டில் நீங்கள் வெள்ளை சீருடையில்தான் ஓய்வு பெறுவீர்கள் என நான் கற்பனை செய்தது உண்டு. ஆனால், நீங்கள் எப்போதும் உங்கள் மனம் சொல்வதை செய்வீர்கள்" என அந்த பதிவில் அனுஷ்கா கூறியுள்ளார். (எ)



# ஐ. பி. எல். போட்டிகள் 17ஆம் திகதி ஆரம்பம்

## ஆறு இடங்களில் நடத்த பி.சி.சி.ஐ. திட்டம்

மும்பை, மே 14

இந்தியா - பாகிஸ்தான் போர்ப் பதற்றம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டிகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் மீண்டும் தொடங்கும் என்று பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவியதை தொடர்ந்து கடந்த 8ஆம் திகதி 18ஆவது ஐ.பி.எல். தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. அன்றைய தினம் பஞ்சாப் - டில்லி அணிகள் இடையிலான ஆட்டம் தரம்சாலாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 10.1 ஓவர்களில் இந்த ஆட்டம் நிறுத்தப்பட்டு மைதானத்தில் இருந்த ரசிகர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்து ஐ.பி.எல். தொடர் ஒருவார காலத்துக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக பி.சி.சி.ஐ. அறிவித்தது.

இந்த நிலையில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டிகள் மே 17ஆம் திகதி முதல் மீண்டும் தொடங்க இருப்பதாக பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது. மத்திய அரசு மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் ஆலோசித்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 17ஆம் திகதி முதல் எஞ்சியிருக்கும் போட்டிகளை ஆறு இடங்களில் நடத்துவது என்றும், ஜூன் 3ஆம் திகதி இறுதிப் போட்டியை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (எ)



# விராட் கோலியின் டெஸ்ட் பயணம்

புதுடில்லி, மே 14

இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி இதுவரை 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில், 68 டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவராக இருந்தார். இதில் 9,230 ஓட்டங்களை 46.85 என்ற சராசரியில் எடுத்துள்ளார். கடைசியாக பார்டர் - கவாஸ்கர் தொடரில் பெர்த் டெஸ்ட் போட்டியில் கோலி 100 ஓட்டங்கள் எடுத்தார். ஜூலை 2023இற்குப் பிறகு கோலி டெஸ்டில் எடுத்த முதல் சதமாக இது அமைந்தது. 2019இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக புனேவில் 254 ஓட்டங்கள் எடுத்ததுதான் அவரது அதிக ஓட்ட எண்ணிக்கை. கடைசி 2 வருடங்களாக அவரது சராசரி 32ஐ தாண்டவில்லை.

இந்த நிலையில் விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். (எ)

# "நீங்கள் செய்த ஒரு விடயத்தை என்னால் மறக்க முடியவில்லை"

## கோலி குறித்து சச்சின் பதிவு

மும்பை, மே 14

இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து சச்சின் டெண்டுல்கர் தனது சமூக வலைத்தள பதிவில், "12 ஆண்டுகளுக்கு முன்பு நான் என்னுடைய கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடிய போது நீங்கள் செய்த ஒரு விடயத்தை என்னால் மறக்கவே முடியவில்லை. உங்களுடைய மறைந்த தந்தை கட்டியிருந்த ஒரு கயிறை எனக்கு நீங்கள் பரிசாக அளிக்க முன்வந்தீர்கள். அந்தச் செயல் மனதைத் தொடும் விதமாக இருந்தது, அன்றிலிருந்து அது எனக்குள் இருந்து வருகிறது.

வெறும் ஓட்டங்களை மட்டும் அல்லாமல் அதற்கு மேல் பலவற்றையும் இந்திய கிரிக்கெட்டுக்கு நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். புதிய தலைமுறை வீரர்கள், ரசிகர்களை கொண்டு வந்துள்ளீர்கள். உங்களுடைய ஸ்பெஷலான டெஸ்ட் கிரிக்கெட்டின் பயணத்துக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள் - எனத் தெரிவித்துள்ளார். (எ)



## அமைச்சரவை...

சாவித்திரி போல்ராஜ், பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல, கைத்தொழில் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க ஆகியோரின் பதவிகளில் மாற்றம் ஏற்படக்கூடும் என்றும் தெரியவந்துள்ளது. (அ)

## ஆட்சியமைக்க...

வெற்றியை பெற்றது தேசிய மக்கள் சக்தியே எனவும் நாம் 267 சபைகளில் வெற்றி பெற்றுள்ளோம். அதில் 120 இடங்களில் எந்தவொரு சிக்கலும் இல்லாமல் சபைகள் அமைக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், 32 சபைகளில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அங்கும் பிரச்னை இல்லாமல் சபைகள் அமைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

சம காலத்தில் சில கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டு தற்போது இணைந்து சபைகள் அமைக்க முயற்சி செய்வது ஒழுக்கவிதிகளுக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சிகள் சபை அமைப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தி 14 சபைகள் பெற்றிருந்தாலும், அவற்றில் 13 இடங்களில் தனியாக சபைகள் அமைக்க முடியாத நிலைமை உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மற்ற கட்சிகள் ஒன்றிணைய முடியாமல் உள்ளதால், பல இடங்களில் ஆட்சி அமைப்பது அரசாங்கத்துக்கே சாதகமாக உள்ளது எனவும் கொழும்பு மாநகர சபையில் 11 ஆசனங்கள் எமக்கு போதவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## கனடாவில்...

தெரிவிக்கவும், இலங்கையில் விடுதலை புலிகளுடனான மோதல் தொடர்பான துல்லியமான வரலாற்றுக் கதைகளை கனடா ஆதரிக்க வேண்டும் என்று கோரவும் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

சமூக ஊடக தளமான எக்ஸ் தளத்தில் நாமல் வெளியிட்ட பதிவில்,

நினைவுச் சின்னத்தின் திறப்பு விழாவுக்குப் பின்னால் உள்ள அரசியல் நோக்கங்கள் குறித்து ராஜபக்ஷ ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார்.

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக எந்த இனப்படுகொலையும் நிரூபிக்கப்படவில்லை.

சர்வதேச சட்டத்தின்கீழ், விடுதலைப் புலி பயங்கரவாதிகளுடனான மோதலில் இலங்கை இராணுவத்துக்கு எதிராக எந்த இனப்படுகொலையும் நிரூபிக்கப்படவில்லை அல்லது நிரூபிக்கப்பட முடியாத நிலையில், கனடா ஒரு தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்துள்ளமை கவலையளிக்கிறது.

அரசியல் காரணங்களுக்காக வரலாற்றுக் கதையைத் திரித்து சிதைக்க நீண்ட காலமாக முயன்று வரும் தமிழ் புலம்பெயர் சமூகத்தினரிடையே உள்ள பிரிவுகளால் கனடிய அரசாங்கம் செல்வாக்குக்கு உட்படுவதாக அவர் குற்றம் சாட்டினார். இதுபோன்ற நடவடிக்கைகள் இலங்கைக்குள் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான தொடர்ச்சியான முயற்சிகளைத் தடுக்கக்கூடும். தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் என்று அழைக்கப்படுவது, கனடிய அரசாங்கத்தால் அரசியல் ரீதியாக இயக்கப்படும் ஒரு நடவடிக்கையாகத் தோன்றுகிறது.

இது நீண்ட காலமாக தமிழ் புலம்பெயர்ந்தோருக்குள் உள்ள சில பிரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயல்படுவதற்குப் பதிலாக, இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பிரிவினையைத் தூண்டிவிட்டன." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குருநாகலில் நீரில் மூழ்கி சிறுமிகள் இருவர் பலி!

கொழும்பு, மே 14

குருநாகல், கல்கமுவ - பாளுகடவல வாவியில் நீரில் மூழ்கி சிறுமிகள் இருவர் உயிரிழந்தனர்.

உறவினர் வீட்டுக்குச் சென்று, வாவியில் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி- மீரிகம பகுதியைச் சேர்ந்த 12 மற்றும் 17 வயதுடைய சிறுமிகள் இருவரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சிக்கலில்...

அந்தக் கட்சி பெரும்

சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

இதன் காரணமாக சாகல ரத்நாயக்க தலைமையில் பல சுற்று பேச்சுகள் நடத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை இறுதி உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (அ)

## கிளிநொச்சி...

டுள்ள உறுப்பினர்களுக்கும், தமிழ் அரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நிர்வாக உறுப்பினர்களுக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தெரிவுகள் இறுதிசெய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக அருணாசலம் வேழமாலிகிதனும் உப தவிசாளராக புஸ்பநாதன் சிவகுமாரும், பூநகரி பிரதேச சபையின் தவிசாளராக சிவகுமாரன் சிறீ ரஞ்சனும் உப தவிசாளராக திருமதி குணலக்சுமி குலவீரசிங்கமும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுப்பிரமணியம் சுரேனும், உப தவிசாளராக சிவகுரு செல்வராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தெரிவுகள் தொடர்பிலான மாவட்டக் கிளையின் எழுத்துமூல தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரனால் கட்சியின் பதில் தலைவரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ் அரசுடன்...

அமைப்பாளருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யார் பெரும்பான்மையாக வெற்றி பெற்றிருக்கிறார்களோ அவர்களிடம் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கும் நாங்கள் பெரும்பான்மையாக வென்ற பிரதேசங்களில் சகோதரக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சி அமைப்பதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

சில இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சில இடங்களில் மக்கள் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஏனைய சிறிய கட்சிகளுடனும் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

தேசிய மக்கள் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களும் நம்மிடம் பேசி உள்ளனர். கொழும்பு போன்ற பகுதியையும் எமது அங்கத்தவர்கள் இணைத்து செயல்பட கலந்தாலோசித்து வருகின்றோம்.

நமது சகோதர கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சியுடனும் சில இடங்களில் நாங்கள் அவர்களும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு பேச்சுகள் நடைபெற்று வருகின்றன - என்றார். (அ)

# சமூக இளமாணி பட்டம் பெற விண்ணப்பித்து பணம் செலுத்தியவர்கள் பரிதாப நிலையில்!

கொழும்பு, மே 14

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூக இளமாணிப் பட்டப் பாடநெறிக்காக கடந்த வருடம் விண்ணப்பித்து பணமும் செலுத்தியவர்கள் தற்போது தாம் பரிதாப நிலையில் ஏமாற்றப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

சமூக இளமாணிப் பட்டப் பாடஷநெறிக்காக கடந்த 2024. ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி முன் பதிவுக்காக 10 ஆயிரம் ரூபாயையும் அதற்குப் பின்னர் 2025.01.28 மாணவர்களை அலுவலக முறையில் பதிவு செய்வதற்கான கடிதம் ஒன்றை வட்ஸ்அப் குழுமத்தில் பதிவிட்டு அதில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய தவணைக்கட்டணம் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலுத்துமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதன்படி இந்த விண்ணப்பதாரிகள் பதிவுக் கட்டணம் தவணைக் கட்டணம் ஆகியவை சேர்த்து ஒரு விண்ணப்பதாரி தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் செலுத்தியுள்ளார்.

அத்தோடு, சுமார் 26 விண்ணப்பதாரிகள் பணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். ஆனால், இவ்வாறு சமூக இளமாணிப் பட்டப் பாடநெறிக்காக முறைப்படி விண்ணப்பித்து பணம் செலுத்தி சுமார் ஒரு வருடம் நெருங்கி இருக்கின்றபோதும் இன்னமும் பாடநெறி தொடங்குவதாக எந்தவொரு அறிவித்தல்களும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து கிடைக்கவில்லை என்று விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவித்து மாணவர்கள் தாம் செலுத்திய பணத்தையாவது மீளளிக்குமாறு கோரி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது பற்றி பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தெரிவிக்கையில்-

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நாங்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு அவர்களது நிறுவனத்தில் பணம் செலுத்தியதற்கு ஆதாரமாக சிட்டை வழங்கிவிட்டு கற்றல் தொடர்பான விவரங்களை அறிவிக்கிறோம் என்று கூறினார்கள். பின்னர் காலம் கடந்து செல்வதனால் நாங்கள் பாடத்திட்ட ஒழுங்கிணைப்பாளர்களைத் தொடர்பு கொண்டோம்.

நாளுக்கு நாள் வெவ்வேறான . கருத்துக்களை பகிர்ந்தார்கள். சரியான பதில் கிடைக்கப்பெறவில்லை. தமிழ் மொழிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை நாடினோம். அவரும் இன்னொரு அதிகாரியின் இலக்கத்தைத் தந்தார். அவரிடம் விவரம் கேட்ட பொழுது அவர் இக்கற்கை நெறியைத் தொடர்வதா? அல்லது செலுத்திய கட்டணத்தை மீளளிப்பதா என்று தீர்மானித்து விட்டு சொல்கிறோம் என்று கூறினார் - என்றனர். (அ)

# ஐ. ம. ச. ஆதரவாளரின் வீட்டின்மீது தாக்குதல்

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி, அம்பாள்குளம் கிராமத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது குறித்த வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் வெற்றி பெற்றார். இந்த நிலையில் குறித்த வேட்பாளருக்கு ஆதரவாக தீவிர பிரசார நடவடிக்கைகள் ஈடுபட்ட ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று முன் தினம் நள்ளிரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் உரிய இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கனடாவின் பொது...

லான அரசில் அமைச்சர்களாக இருந்த பலர் இந்த அமைச்சரவையில் இருக்கமாட்டார்கள் என்ற செய்தி பரவிய நிலையில், முன்னர் அமைச்சர்களாக இருந்த தமிழர்கள் இருவரும் நேற்று அமைச்சர்களாக பதவியேற்றனர்.

முன்னர் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சராக பதவி வகித்த இந்திரா அனிதா ஆனந்த் தற்போது கனடாவின் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

இதேவேளை கனடிய பூர்வீக குடிகள் விவகாரம் மற்றும் நீதி சட்டமா அதிபர் திணைக்கள அமைச்சராக இருந்த ஹரி ஆனந்தசங்கரி பொது பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

கனடாவின் புதிய அமைச்சரவையின் பொதுபாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அண்மையில் கனடாவில் இடம் பெற்ற பொதுதேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான தரப்பு வெற்றிபெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்னி 28 அமைச்சர்களை அமைச்சரவை பதவிகளுக்கும் மேலும் 10 பேரை வெளியுறவு செயலாளர்களாகவும் நியமித்துள்ளார். (அ)

## காணாமல்...

ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி நினைவு கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு தாய்மாரும் அந்த நாளை கடந்த 16 வருடங்களாக நினைவு கூர்ந்து கஞ்சி காய்ச்சி வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்தக் கஞ்சி 16 வருடங்களுக்கு முன் ஒரு பிடி அரிசி கூட கிடைக்காமல், இருந்த அரிசியை வைத்து தண்ணீர் ஊற்றி, உப்பும் இல்லாமல் அங்கிருந்த அமைப்புகள் குறித்த கஞ்சியை பொதுமக்களுக்கு வழங்கி உள்ளனர்.

அதில் சிலருக்குத்தான் இந்த கஞ்சி கிடைத்தது. வரிசையில் நின்று இந்த கஞ்சியை வாங்கி பசியை போக்குவோம் என்ற நேரத்தில்கூட, கொடூர யுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

கஞ்சிக்காக வரிசையில் நின்ற எத்தனையோ உறவுகள் கஞ்சி கிடைக்காமல் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். இன்று அதை மறக்கவும் முடியாது - மன்னிக்கவும் முடியாது.

எம் இனத்திற்கு நடந்த கொடூரத்தை உலக நாடுகள் அனைத்தும் பார்த்துக் கொண்டுதான் இருந்தன. இன்றுவரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த கஞ்சியை நாம் வழங்குவதற்கு காரணம், தற்கால இளைய சமூகத்திற்கு 16 வருடங்களுக்கு முன் என்ன நடந்தது என்பதை தெரிவிக்கவே - என்றனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# வவுனியாவில் தோல்விக்கு சத்தியலிங்கமே காரணம்!

## சிவமோகன் குற்றச்சாட்டு

வவுனியா, மே. 14

வவுனியா மாநகரசபையில் தமிழரசுக் கட்சி தோல்வியடைந்தமைக்கு சத்தியலிங்கத்தின் செயற்பாடே காரணம். அவர் அரசியலை நாகரிகமாக செய்யவில்லை என தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முள்ளிவாய்க்கால் நினைவு நாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். இறுதி யுத்ததில் சிறிலங்கா இராணுவத்தால் கொத்துக் கொத்தாக பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்பது பகிரங்கமான உண்மை.

விடுதலைப் புலிகளின் யுத்தம் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் எமது மக்களை முள்ளிவாய்க்கால் நோக்கி நகர்த்தியவர் கள் வெளிநாட்டு அரசுகள் தான். எனவே அவர்களுக்கு சகலதும் தெரியும். எனவே, ஐ.நா அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.

நயவஞ்சக தனமாக எமது மக்களை நம்ப வைத்து, இனவழிப்பு நடந்தது. இலங்கையில் தமிழருக்கு எதிராக இனவழிப்பு நடந்தது என்பதை பகிரங்கமாக வெளிபடுத்தி கனடாவில் நினைவு தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.பிரன்டன் நகர மேயர் அந்த நிகழ்சியை நடத்தியுள்ளார். இது எமது இனத்தின் முதலாவது மைல்கல் என்று கூறலாம். யுத்தம் மௌனிக்கப்பட்ட பின் கொல்லப்பட்டவர்கள் அதிகம்.

சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட் டனர். காணாமல் போகச் செய்யப்பட்டனர். அதே போல் காயமடைந்து இருந்தவர்கள் முள்ளிவாய்காலில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்கள். முகாம்களில் இருந்தவர்களில் பலர் காணாமல் செய்யப்பட்டனர். கொல்லப்பட்டனர்.

இதற்கு சாட்சிகள் ஏராளம். இப்படி நடந்த இனவழிப்பை எமது தமிழர்களில் இருந்து இனவழிப்பு நடக்கவில்லை. போர்க்குற்றம் தான் நடந்தது என ஐ.நா வரை எடுத்துச் சென்று மாற்றுக் கதைகளை சொல்லியிருந்தார்கள். கனேடிய அரசு கூறுகிறது இனவழிப்பு நடந்தது இதை ஏற்றுக் கொள்ளாதாவர்கள் கனடாவில் இருந்து வெளியேறுங்கள் என்று. தமிழரசுக் கட்சியில் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் இனவழிப்பு நடக்கவில்லை என கடந்த காலங்களில் கூறியுள்ளார்கள்.

40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் எங்களுடன் இருந்த கோடரிக் காம்புகளால் நீதி கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சியில் நிர்வாகப் பொறுப்புக்களில் இருந்து இனவழிப்பு நடக்கவில்லை எனக் கூறியவர்கள் வெளியேறவேண்டும். தமிழரசுக் கட்சி மட்டும் தான் எமது போராட்டத்தை கடந்த வேண்டியவர்கள். கனடா போன்று ஒவ்வொரு நாட்டிலும் நினைவுத் தூபி அமைப்பதற்கான சந்தர்ப்பங்கள் வந்துள்ள நிலையில் இனவழிப்பு நடக்கவில்லை என்று கூறியவர்கள் தமிழர் தேசத்தில் அரசியல் செய்யாது வெளியேறுங்கள். எங்களை வெளியேற்றி விட்டு நீங்கள் குளிர் காய இடமளிக்க முடியாது-என்றார். (அ)

# மின்சார சபையின் தலைவர் பதவியிலிருந்து விலகவில்லை!

கொழும்பு, மே. 14

மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாப்பிட்டிய தனது பதவியில் இருந்து விலகியுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மையில்லை என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு இந்த மறுப்பறிக்கையை வெளியிட்டுள்ளது.மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாப்பிட்டிய வெளிநாடு செல்வதற்காக குறுகிய காலத்துக்கான விடுமுறையொன்றை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த விடுமுறைக்கான அனுமதி கோரியே அவர் கடிதமொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.மற்றும்படி அவர் தனது பதவியிலிருந்து விலகவில்லை.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர் மீண்டும் மின்சார சபையின் தலைவர் பதவியில் தொடர்வார் என்றும் குறித்த அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய இலங்கையை இந்தியா பின்பற்றவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

கொழும்பு, மே. 14

**இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பொருளா தார வளர்ச்சியும் பயங்கரவாதத்தைக் கையாள்வதும் ஒரே நேரத்தில் தொடரவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

தி இந்து செய்தித்தாள் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடி, வளர்ச்சி கண்ட இலங்கையை இந்தியா பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் அதேவேளை மகாவலி மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்தவும் முதலீட்டு வலயங்களை அமைக்கவும் நாங்கள் உறுதிபூண் டோம் என தெரிவித்த ரணில் விக் கிரமசிங்க, இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறப் போகிறதா அல்லது இன்று இருப்பது போன்று இருக்குமா என்றும் கேள்வி எழுப்பினார்.



(அ)

# வவுனியாவிலும் வழங்கப்பட்டது முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி



வவுனியா, மே. 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, வவுனியா கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே 12 ஆம் திகதி முதல் மே 18 ஆம் திகதி வரை கஞ்சி வாரம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், நேற்று முற்பகல் 11 மணியளவில் வவுனியா தபால் நிலையத்துக்கு முன்பாக குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா - இலுப்பையடி பகுதியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (அ)

# 207 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, மே. 14

பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நேற்று முன்தினத்தில் அதிகளவு கஞ்சா போதைப்பொருள் தொகை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 70 கிராம் 626 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 59 பேரும், 89 கிராம் 356 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 87 பேரும் 82 கிலோ கிராம506 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் 58 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# வடக்கு மாகாண வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய ஐந்தாண்டு திட்டம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே. 14

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிராந்திய மருத்துவமனைகளையும் சிறப்பு ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள அனைத்து பிராந்திய மருத்துவமனைகளும் வட மாகாண சபையின் ஆதரவுடன் ஐந்தாண்டு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும், மாகாணத்தில் வாழும் கிராமப்புற மக்களுக்கு சிறந்த மற்றும் வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# வித்தியாவின் 10 ஆம் ஆண்டு நினைவு யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்





யாழ்ப்பாணம், மே. 14

பாலியல் வன்கொடுமைக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்ட வித்தியாவின் 10 ஆவது ஆண்டு நினைவு மற்றும் இலங்கையில் தொடரும் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ் பிரதான பஸ் நிலையம் முன்பாக நேற்று காலை இக் கவனயீர்ப்புப் போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் இப்போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள்,பாலியல் தொல்லையற்ற வேலைத்தளங்களை உறுதிப்படுத்துவோம், அரசே அம்சிகாவுக்கு நீதியை பெற்றுக்கொடு, பணியிடங்களில் பாலியல் தொல்லைக்கு இடமில்லை, சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துங்கள், வாக்கு சேகரிப்புக்கு திரள்பவர்கள் சமூக நீதிக்கு ஒதுங்குவது ஏன்? எமது நாட்டின் பண்பாடா பாலியல் வன்கொடுமை? போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கொடுமைகள் தொடர்வதைத் தடுக்க, சட்டமன்ற, நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறைகளில் உள்ள பொறுப்பான நபர்கள் உடனடி மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.